## செய்திக்குறிப்பு

புதுவை அரசு காரைக்கால் மாவட்டத்தில் COVID-19 தொற்று பரவலை தடுக்கும் பொருட்டு ஊரடங்கு உத்திரவு பிறப்பிக்கப்பட்ட நிலையில் பொதுமக்கள் நடமாட்டம் வெகுவாக கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. ஆயினும் பொதுமக்கள் தங்கள் அவசர மருத்துவ தேவைகளுக்காகவும் பிற அவசிய தேவைகளுக்காகவும் மாவட்ட நிர்வாகத்தை நேரில் அனுமதி கேட்டு வருவதை தவிர்க்கும் விதமாக வாட்ஸ் அப் எண் 9488770024 யை தொடர்பு கொண்டு கீழ்க்கண்ட விவரங்கள் அனுப்பி அனுமதி பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது. உரிய பரிசீலனை செய்து தகுதியான நபர்களுக்கு அவர்களின் வாட்ஸ் அப் எண்ணுக்கே அனுமதி (e - pass) அனுப்பிவைக்கப்படும். செல்போனில் அனுப்பப்பட்ட அனுமதியை காண்பித்து பயணம் செய்யலாம் .

1, பயணம் செய்பவரின் பெயர் / முகவரி

2. பயணத்திற்கான காரணம் மற்றும் உடன் பயணிப்பவர்களின் எண்ணிக்கை.

3. பயண தேதி.

4. செல்லுமிடம் (From / To )

5. பயண வழித்தடம் (Route )

6. வாகனத்தின் வகை (Type of Vehicle).

7. வாகன பதிவு எண்.

8. வாட்ஸ் அப் எண்.

9. ஆதார் எண்.

Shot on realme C2
By Push